**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 121/2022** | **நாள் – 25.09.2025** | **சாட்சி – ம.சா.1** |

**திரு. அய்யப்பன், த/பெ. சுந்தரமூர்த்தி**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த போது நான் எங்கிருந்து எங்கு சென்றேன் என்றால் திருப்பனந்தாளில் உள்ள எனது மனைவியின் தங்கை வீட்டிற்கு சென்றேன். நான் சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமானதாகும். நான் ஓட்டி சென்ற வாகனத்தை மோட்டார்வாகன ஆய்வறிக்கு உட்படுத்தினேனா என்றால் உட்படுத்தினேன். அதற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கையை நான் தாக்ல செய்யவில்லைஎன்றால் சரிதான். நான் வாகனத்தில் சென்ற போது தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். இருசக்கர மோட்டார் வாகனத்தில் நான் சென்ற போது எனது மகனை பெட்ரோல் டேங்கில் அமரவைத்திருந்தேன் என்றால் சரிதான். நான் சிகிச்சை எடுத்து கொண்டது அரசு மருத்துவமனையில் தான் என்றால் முதலில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். பின் அன்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அன்பு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சை பெற்றேன் என்றால் உள்நோயாளியாக ஒருவாரம் சிகிச்சை பெற்றேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சித்தாள் வேலை செய்கிறேன். சித்தாளுக்கு ஒரு நாளுக்கு எவ்வளவு சம்பளம் என்றால் 700 ரூபாய் சம்பளம். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் கொத்தனார் என்று உண்மைக்கு புறம்பாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் விபத்திற்கு முன்பு கொத்தனார் வேலை பார்த்தேன். கொத்தனாருக்கு கட்டிட சங்க உறுப்பினர் அட்டை உண்டு என்றால் சரிதான். எனக்கு சங்க உறுப்பினர் அட்டை உள்ளதா என்றால் இல்லை. நான் கொத்தனார் வேலை செய்யவில்லை என்றாலும், மனுவிற்காக கொத்தனார் வேலை செய்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எங்கு அடிப்பட்டது என்றால் தலையில் அடிப்பட்டது. தலையில் அடிப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனக்கு அறுவை சிசிச்சை செய்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் விடுவிப்பு சான்று

தாக்கல் செய்துள்ளேன். எனக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படவில்லை என்றாலும், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லைஎ ன்றாலும் தையல்போட்டார்கள். சிகிச்சைக்கு பிறகு நான் பூரணமாக குணமாகிவிட்டேன் என்றாலும், தற்போது வேலைக்கு செல்கிறேன் என்றாலும் சரிதான். ஆனால் வெயிலில் நின்றால் தலை வலி உள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை சரியாக சட்டவிதிகளுக்கு உட்பட்டு ஓட்டி வந்தார் என்றாலும், 1ம் எதிர்மனுதாரர் மீது எவ்வித தவறும் இல்லை என்றாலும், மேற்கண்ட விபத்தானது எனது கவனகுறைவாலும், அஜாக்கிரதையாலும் நடந்தது என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. எனக்கு விபத்தின் போது இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. எனது ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட எனக்கு சொந்தமான வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இருந்ததா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதரண காயங்கள் என்றாலும், அவை குணமாகிவிட்டது என்றாலும், மனுவிற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் நானும் எனது மனைவியும் மற்றும் இரண்டு குழந்தைகளும் மொத்தம் 4 பேர் பயணித்தோம் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் 4 பேர் சென்றதால் நான் வாகனத்தை கட்டுப்படுத்த இயலாமல் விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்தானது எனது அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்பட்டது என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA
Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.09.25 18:44:19 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*